## படல்குமபுர பிரதேச சபை

## மொனறாகலை மாவட்டம்

-----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 10 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 06 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 22 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, படல்கும்புர பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் 08 கட்டடங்கள் 02 மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டிகள், 310 நூலகப் புத்தகங்கள் மற்றும் 02 கணனிகள் மற்றும் துணைக் கருவிகள் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டிகளின் கீழ் கணக்கீடு செய்திருந்த ரூபா 119,000 பெறுமதியான கை டிரக்டர் வண்டி 2015 ஜுன் 25 திகதி பௌதீகப் பரிசோதனையின் போது கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

----------------------------------------------------------------------------------

11 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 37,432,035 ஆக காணப்பட்டதுடன் பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 9,512,255 தொகை ஆகும்.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

(அ) தொடர்ந்தும் முன் கொண்டு வரப்படுகின்ற பெற வேண்டிய கணக்குகள் மற்றும் முற்கொடுப்பனவு மீதி முறையே ரூபா 47,861 உம் மற்றும் ரூபா 83,719 உம் மீளாய்வாண்டின் போது இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை மற்றும் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் முறையே ரூபா 374,812 உம் மற்றும் ரூபா 289,759 காணப்பட்டதுடன் அவற்றை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 1,612,954 இற்கான 4 சொத்து விடயங்கள், 01 பொறுப்பு விடயம், வருமான விடயம் மற்றும் செலவு விடயம் என்பவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| i. பிரிவு 19(1)(i) | மீளாய்வாண்டின் போது 02 கணனி பயிற்சி பெற்றுள்ள அலுவலர்கள் பணியில் அமர்த்தப்பட்டு ரூபா 63,000 படியொன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும், உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்துமூல பூர்வாங்க அங்கீகாரத்தினை பெற்றிருக்கவில்லை. |
| ii. பிரிவுகள் 132(ஒ) மற்றும் (ஓ) | அமைச்சரின் அங்கிகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் ரூபா 19,000 செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| iii. பிரிவுகள் 158 மற்றும் 159 | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 25,782,175 இற்கான நிலுவை வருமானத்தை அறவீடு செய்திருக்கவில்லை. |

2 நிதி செயலாற்றுகை

--------------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,043,204 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 154,709 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய குறைதல் ரூபா 2,888,495 ஆகும்.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------------

முன்னைய ஆண்டுடன் சார்பிளான மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,888,495 இற்கான குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பான பகுப்பாய்வு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| மீண்டுவரும் வருமானம் | 2013 | 2014 | முரண் | |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | |
| வீதவரி | 1,627,548 | 760,286 | 867,262 | |
| வாடகை | 2,138,410 | 2,258,762 | (120,352) | |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 130,024 | 942,615 | (812,591) | |
| சேவைகளுக்கான கட்டணம் | 739,216 | 379,825 | 359,391 | |
| தண்டப்பணம் மற்றும் எழுத்தாணைக் கட்டணம் | 1,031,822 | 1,624,794 | (592,972) | |
| ஏனைய வருமானங்கள் | 697,861 | 134,410 | 563,451 | |
| வருமான உதவி | 14,914,269 | 11,709,900 | 3,204,369 | |
| | | | | 3,468,558 |
| **மீண்டுவரும் செலவுகள்** | | | | |
| சம்பளம் மற்றும் படிகள் | 17,697,302 | 14,120,789 | (3,576,513) | |
| பிரயாணச் செலவுகள் | 410,260 | 280,145 | (130,115) | |
| வழங்கல்களும் உபகரணங்களும் | 984,469 | 1,283,775 | 299,306 | |
| மூலதன சொத்துக்களின் திருத்தமும் பராமரிப்பும் | 1,856,061 | 471,233 | (1,384,828) | |
| போக்குவரத்து தொடர்பாடல் தேவைகள் மற்றும் சேவைகள் | 3,198,239 | 1,628,603 | (1,569,636) | |
| வட்டி செலுத்தல் | - | 7,500 | 7,500 | |
| உதவி நிதி பங்களிப்பு நிதி மற்றும் மானியம் | 25,000 | 23,398 | (1,602) | |
| ஓய்வூதிய, ஓய்வூதிய நலன்கள் மற்றும் பணிக்கொடை | 151,023 | 149,858 | (1,165) | |
| | | | | (6,357,053) |
| நிதி விளைவுகளில் குறைதல் | | | | **2,888,495** |

2.3 வருமான நிருவாகம்

-------------------------------

2.3.1 வீதவரி

----------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 140(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2006 ஆண்டின் பின்னர் வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.3 வாடகை

-------------

(அ) பிரதேச அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாடுகளின் மீது 2008 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த படலகும்புர வர்த்தக தொடர் கட்டடத்தின் 16 கடைகள் இது வரை வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) படலகும்புர நகரத்தில் அமைந்துள்ள 04 ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை 2012 ஆண்டின் போது வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2011 ஆண்டின் போது அவ் ஆதனத்தை ரூபா 1,360,500 வாடகைக்கு எடுத்திருந்த வாடகையாளருக்கு 2012 ஆண்டின் போது குளிரூட்டப்பட்ட மாட்டிறைச்சிக் கடை நடத்துவதற்காக ரூபா 3,300 இற்காக வர்த்தக அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளமையால் சபைக்கு ரூபா 1,496,550 இற்கான (2011 ஆண்டின் கேள்வித் தொகை ரூபா 1,360,500 மற்றும் நூற்றிற்கு 10 அதிகரித்தல் ஆகிய ரூபா 136,050 இரண்டினது கூட்டுத்தொகை) வருமானம் ஒன்றினை இழக்க நேரிட்டிருந்தது.

(இ) 09 ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை மற்றும் அலுப்பொத்த நகரத்தின் மாட்டிறைச்சி வர்த்தகத்தின் உரிமையை மீளாய்வாண்டின் போது வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.3 செலுத்துகை டவர் வருமானம்

------------------------------------------------

2006 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரை நிர்மாணிக்கப்பட்டிந்த 07 செலுத்துகை டவர்களில் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைத் தொகை ரூபா 87,000 ஆகும்.

2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த வருமானம் ரூபா 963,051 ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| | ------- |
| நீதி மன்றத் தண்டப்பணம் | 140,461 |
| முத்திரை கட்டணம் | 822,590 |

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

----------------------------------------------

3.1.1 மீளாய்வாண்டின் போது இலக்கம் ஆர்டீ – 4629 கொண்ட டிரக்டர் வண்டிக்கு எரிபொருள் 819 லீட்டர்கள் ஊற்றுவதற்காக ரூபா 98,412 சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்காக ஓட்டக் குறிப்புக்கள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த டிரக்டர் வண்டியை ஓட்டுவதற்காக 03 சாரதிகளினால் எரிபொருள் கட்டளைகள் பெற்றிருந்ததுடன் அவர்களுக்கு மீளாய்வாண்டின் போது மொத்த சம்பளம், மேலதிக நேரப்படி மற்றும் விடுமுறை நாள் சம்பளம் என ரூபா 944,804 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

3.1.2 2010, 2011, 2013 மற்றும் மீளாய்வாண்டின் போது அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் சாரதிகள், நூலகப் பொறுப்புள்ள வெளிக்கள தொழிலாளர்கள் மற்றும் சுகாதார தொழிலாளர்கள் ஆகிய பதவிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த 09 ஊழியர்கள் மீளாய்வாண்டு அக்டோபர் 24 ஆந் திகதி நிரந்தர சேவைக்கு சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அடக்கியிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போதும் மொத்த சம்பளம் ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என ரூபா 1,162,815 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

3.1.3 மின்சக்தி அமைச்சு செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2(1) இன் பிரகாரம் வீதி விளக்குகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் வீதி விளக்குகள் செயற்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்காக சேவை வழங்குனர் ஒருவராக செயற்பட வேண்டும் எனினும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 488,955 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் வீதி விளக்குகள் பொருத்தும் போது பொருத்தும் முறை, பொருத்தும் விளக்குளின் வகை, எண்ணிக்கை பற்றிய விபரம் என்பன பதிவு செய்திருக்கவில்லை.

3.2 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

தனிப்பட்ட கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் ஏற்பாடுகளின் மீது 09 பாதைகளுக்கு நீர் வழங்களை நீடிப்பதற்காக 09 ஒப்பந்த சங்கங்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 6,202,844 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜுலை வரையும் நீர் வழங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. 2 அங்குளம் (மி.மீ. 63) மீற்றர் ஒன்று நீளத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரேட் தொகை ரூபா 931 இற்கு மிகையாகிய ரூபா 1,047 வீதம் 04 நீர் குழாய்ப் பாதைகளுக்காக ரூபா 359,832 தொகை ஒன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்